FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
~~குற்றவிதொபிரிவு 154 இன் கீழ்~~ Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8040861 C

1. District : புதுக்கோட்டை மாவட்டம் | PS: காந்தர்கோட்டை காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: 04 முதஅ. எண் | Date: 28.08.2026 நாள்

2. (i) Act சட்டம்: மோட்டார் வாகனம் திருத்தச்சட்டம் 1988 | Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: நிறைவேற்றப்பட்டது 2018 BNSS | Sections பிரிவுகள்: 106
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 27.08.2026 | Date to : நாள் வரை
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.08.2026 | Time : நேரம் 18.30 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 32. கிமீ. வடமேற்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி திருக்கோகர்ணம் சார்பதிவாளர் அலுவலகம், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் மு. பாலகிருஷ்ணன் வயது 44/2026 | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் நீரந்து
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 03.02.1982 | (d) Nationality : நாட்டினம் இந்தியர் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர் (சி.பா.து) | (g) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், கறம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
சு. சதுராமலிங்கன், வயது 45/2026, த/பெ. சுப்பிரமணியன், உதவியாளர் / சார்பதிவாளர் (பொறுப்பு), திருக்கோகர்ணம் சார்பதிவாளர் அலுவலகம், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28.8.2026

28.08.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 29.08.2026 / 10.00

Name: பெயர் பி. பீட்டர்
Rank: நிலை தலைமைக் காவலர் No. எண் .....
இ.த.ரு. பிரிவு, புதுக்கோட்டை.

பணிந்து அனுப்பப்பட்டது:

நேற்று (27.08.2026)ம் தேதி வியாழக்கிழமை புதுக்கோட்டை மாவட்ட ஆய்வு குழு அலுவலர் மற்றும் குழுவினரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு பார்டியினரும் சேர்ந்து 15.00 மணி முதல் 20.20 மணி வரை குளத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து, இன்று 28.08.2026ஆம் தேதி ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர். திரு.மு.பாலகிருஷ்ணன், வயது 44/2026, த/பெ முத்து, தனி வட்டாட்சியர் (ச.பா.தி), வட்டாட்சியர் அலுவலகம், கறம்பக்குடி, புதுக்கோட்டை பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை. அய்யா, நேற்று (27.08.2026)ம் தேதி வியாழக்கிழமை புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் உள்ள குளத்தூர் தாலுகா அலுவலகத்திற்கு மேற்கே அமைந்துள்ள குளத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு பத்திரப்பதிவு செய்து தருவதாக கிடைக்கப்பெற்ற ரகசிய தகவல் அடிப்படையில் நான் மற்றும் திரு.து.ரஞ்சித்குமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர் உள்ளிட்ட ஆய்வுக்குழு மற்றும் புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.அ.பீட்டர் மற்றும் குழுவினருடன் இணைந்து நேற்று (27.08.2026) பகல் 15.00 மணி முதல் இரவு 20.20 மணி வரை புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் உள்ள குளத்தூர் தாலுகா அலுவலகத்திற்கு மேற்கே அமைந்துள்ள குளத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் ஆய்வு மேற்கொண்டோம். மேற்படி திடீர்ஆய்வின் போது சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் சென்று அந்த அலுவலகத்தின் ஹாலில் தெற்கு பார்த்தவாறு மேஜை சேர் போட்டு அமர்ந்திருந்த நபரிடம் திடீர் ஆய்வுகுழுவினர், தங்களை அறிமுகம் செய்து கொண்டு, அங்கு திடீர் ஆய்வு மேற்கொள்ள இருக்கும் விபரம் தெரிவிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து அந்த நபர் தன்னுடைய பெயர் சேதுராமகிருஷ்ணன் என்றும், இந்த அலுவலகத்தின் உதவியாளர் / பொறுப்பு சார்பதிவாளர் என்று தெரிவித்தார். அதன்பிறகு அவரது டேபிள், அதன் டிராயர் சோதனை செய்யப்பட்டது. அதில் பணமோ, விலை உயர்ந்த பொருளோ இல்லை. அதன்பிறகு அவருக்கு பின்னால் தெற்கு பார்த்த வாசலுடன் இருந்த பதிவு வைப்பு அறை சோதனை செய்யப்பட்டது. அப்போது அந்த அறையின் இரண்டாவது ரேக்கு வரிசைக்கும் மூன்றாவது ரேக் வரிசைக்கும் இடையே இருந்த அட்டைப்பெட்டியின் மேலே தெர்மாகூல் பொருட்களால் மூடப்பட்ட நிலையிலிருந்த அந்த அட்டைப்பெட்டியின் உள்ளே ஆகஸ்ட் 17ஆம் தேதியிட்ட நாளிதழால் சுற்றப்பட்டு ரப்பர் பேண்ட் போடப்பட்டு பண்டல் ஒன்று இருந்தது. அந்த பண்டலை ஆய்வுக்குழுவினர் எடுத்து பார்த்த போது, அதில் 500 ரூபாய் நோட்டுகட்டுகள் இருந்தது. அந்த ரூபாய் நோட்டுக்களை எண்ணிப்பார்த்த போது, அதில் ரூ.1,07,000/- (500X 214 ரூபாய்

நோட்டுகளாக) இருந்தது. இதுகுறித்து சார்பதிவாளர் திரு.சேதுராமகிருஷ்ணன் அவர்களிடம் விசாரித்த போது, பணம் இருந்த இடத்திற்கு அருகில் தான் வழக்கமாக மதிய உணவு சாப்பிடுவதாகவும், அந்த அறையை பயன்படுத்திவருவதாகவும், ஆனால் அந்த பணத்தை பற்றி தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார். அவருக்கு பின்னால் உள்ள பதிவறையில் இருந்த பணம் குறித்து அவர் சரியான முகாந்திரம் சொல்லவில்லை. ஆகவே பத்திரப்பதிவு செய்ய வரும் பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என்ற அடிப்படையில், அப்பணம் ரூ.1,07,000/– கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு அதற்கு கிழக்கே மேற்கு பார்த்த வாசலுடன் இருந்த பதிவு வைப்பறை சோதனை செய்யப்பட்டது. மேலும் அதற்கு தெற்கே இருந்த பதிவு வைப்பறையும் சோதனை செய்யப்பட்டது. அதில் பணமோ, விலை உயர்ந்த பொருட்களோ இல்லை. அதன்பிறகு மேற்படி அலுவலக ஹாலில் வைத்து சார்பதிவாளர் திரு.சேதுராமகிருஷ்ணன் அவர்களை சோதனை செய்த போது, அவரது கருப்பு நிற மணிபர்சிலிருந்து ரூ.3,700/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து அவரிடம் விசாரித்த போது, தனது சொந்த செலவுக்கு கொண்டு வந்ததாக தெரிவித்தார். மேலும் அலுவலகத்தில் இருந்த தனிநபர் பண இருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் அவர் 27.08.2026ஆம் தேதி ரூ.2,000/– கொண்டு வந்ததாக பதிவு செய்யப்பட்டது. மேலும் அவரை விசாரணை செய்த போது, அவர், தான் எப்போதும் அதிக பணம் கொண்டு வருவதாகவும், ஆனால் ரூ.2,000/– கொண்டுவருவதாக தினந்தோறும் பெயரளவிற்கு மேற்படி பதிவேட்டில் பதிவு செய்வதாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் முறையானதாக இல்லாததால் மேற்படி பணம் லஞ்சமாக இருக்கலாம் என்ற அடிப்படையில் ரூ.3,700/– ஆய்வுக்குழுவினரால் கைப்பற்றப்பட்டது.

மேலும் அவருக்கு அருகில் அமர்ந்திருந்த உதவியாளர் திரு.பாலமுருகன் என்பவரை சோதனை செய்த போது, அவர் ரூ.160/– எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரித்த போது, இன்று காலையில் அலுவலகத்திற்கு வரும் போது ரூ.950/– கொண்டு வந்ததாகவும், தனது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போட்ட செலவு, மதிய சாப்பாட்டு செலவு, டீ செலவு போக மீதத்தொகை என்று தெரிவித்தார். மேலும் தனிநபர் பண இருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் இன்று 27.08.2026–ஆம் தேதி ரூ.9,050/– கொண்டு வந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.160/– ஆய்வுக்குழுவினர் முன்னிலையில் திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு தெற்கே சற்று தள்ளி இருந்த கணினி முன்பு அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திரு.கோபிநாத் என்பவரை சோதனை செய்த போது, அவர் ரூ.330/– எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரித்த போது, இன்று காலையில் அலுவலகத்திற்கு வரும் போது ரூ.460/– கொண்டு வந்ததாகவும், தனது மதிய சாப்பாட்டு செலவு, டீ செலவு போக மீதத்தொகை என்று தெரிவித்தார். மேலும் தனிநபர்

பண இருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் இன்று 27.08.2026–ஆம் தேதி ரூ.460/– கொண்டு வந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.330/– ஆய்வுக்குழுவினர் முன்னிலையில் திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்த ஹாலில் இருந்த திரு.பரமசிவம், த/பெ சண்முகம், எண்.7, எழில் நகர் 2வது தெரு, கீரனூர் என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடமிருந்த ரூ.3200/– எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரித்த போது தனது அண்ணி தனலெட்சுமி அவருக்கு சொந்தமான இடத்தை விற்பனை செய்ய வந்தவருக்கு துணையாக வந்ததாக கூறினார். மேலும் மேற்படி பணம் தனது சொந்த செலவுக்கு கொண்டு வந்ததாக கூறினார், விசாரணைக்குப்பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.3200/– ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த ஹாலில் இருந்த திரு.ராமசாமி, த/பெ கோவிந்தன், தென்னம்பிள்ளை, மாத்தூர் என்பவரையும், அவரது மனைவி திருமதி.செல்லம்மாள் என்பவரையும் விசாரணை செய்த போது, அவர்களிடம் பணம் ஏதுமில்லை. மேலும் அவர்கள் தங்களது மகள் கலாராணி என்பவருக்கு தங்களுக்கு சொந்தமான மாத்தூரில் உள்ள 47 சென்ட் வயலை தானமாக கொடுத்ததை பதிவு செய்ய வந்ததாக கூறினார்கள். மேலும் அங்கிருந்த திரு.முருகேசன், த/பெ துரைச்சாமி, எண்.50, மேலத்தெரு, களமாவூர், புதுக்கோட்டை மாவட்டம் என்பவரை விசாரணை செய்த போது, தன்னிடமிருந்த ரூ.270/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் மேற்படி தனது செலவுக்காக கொண்டு வந்ததாகவும், தனது மாமனார் திரு.ராமசாமி என்பவர் அவரது வயலை தனது மனைவி கலாராணிக்கு தானமாக கொடுத்ததாகவும், அதற்காக பத்திரப்பதிவிற்காக இந்த அலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். விசாரணைக்குப்பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.270/– ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திருமதி.கலாராணி என்பவரை விசாரித்த போது, அவரிடம் பணம் ஏதுமில்லை என்று தெரிவித்தார்.

அந்த ஹாலில் இருந்த திரு.அழகுதுரை, த/பெ அய்யாக்கண்ணு, எண்.4/47, கள்ளர்தெரு, அயன்புத்தூர், குண்டுர் வழி, ஏர்போர்ட் அஞ்சல், திருச்சி மாவட்டம் என்பவரை விசாரணை செய்த போது, தன்னிடமிருந்த ரூ.40,820/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் மேற்படி பணம் குறித்து விசாரித்த போது அந்தப்பணம் தன்னுடைய அண்ணன் நாராயணன் என்பவர் தனக்கு சொந்தமான வீட்டு மனையை டி கீழையூரைச் சேர்ந்த பாண்டியராசு, த/பெ பவுன்ராசு என்பவருக்கு விற்பனை செய்ததாகவும், அதற்கான பணம் ரூ.1 இலட்சத்தை பாண்டியராசு கொடுத்ததாகவும், அதில் ரூ.60,000/–த்தை தன்னுடைய அக்காவிடம் கொடுத்துவிட்டதாகவும், மீதப்பணம் ரூ.40,000/–ம் தனது செலவுக்கான தொகை ரூ.820/–ம், ஆக மொத்தம் ரூ.40,820/– தன்னிடம் இருப்பதாக

கூறினார். விசாரணைக்குப்பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.40,820/– ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அங்கிருந்த திரு.பாண்டியராசு, த/பெ பவுன்ராசு, எண்.489, டி கீழையூர், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவரை விசாரணை செய்த போது, தான் திரு.நாராயணன் என்பவரிடம் வீட்டு மனை வாங்கியதாகவும், அதற்காக தான் கொண்டு வந்த பணம் ரூ.1 இலட்சத்தை திரு.அழகுதுரை என்பவரிடம் கொடுத்ததாகவும், தன்னிடம் வேறு பணம் ஏதுமில்லை என்று தெரிவித்தார். அவருக்கு அருகில் இருந்த நபரை விசாரணை செய்த போது தனது பெயர் திரு.பழனியப்பன், த/பெ சிங்காரம், எண்.4/31, அம்மன் சன்னதி, கீரனூர், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்று கூறினார். மேலும், அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.840/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து விசாரித்த போது மேற்படி பணம், தனது செலவுக்காக கொண்டு வந்ததாக கூறினார். மேலும் பாண்டியராசு என்பவர் வாங்கிய வீட்டு மனை சம்மந்தமான பத்திரபதிவிற்கு சாட்சியாக வந்ததாக கூறினார். விசாரணைக்குப்பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.840/– ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவருக்கு அருகில் இருந்த நபரை விசாரணை செய்த போது தனது பெயர் திரு.ஆறுமுகம், த/பெ கருப்பையா, எண்.10, மெயின்ரோடு, முருக்குப்பட்டி, ஜமால்முகமது கல்லூரி சாலை, திருச்சி–20 என்று கூறினார். மேலும், அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.520/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். இதுகுறித்து விசாரித்த போது மேற்படி பணம், தனது செலவுக்காக கொண்டு வந்ததாக கூறினார். மேலும் பாண்டியராசு என்பவர் வாங்கிய வீட்டு மனை சம்மந்தமான பத்திரபதிவிற்கு சாட்சியாக வந்ததாக கூறினார். விசாரணைக்குப்பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.520/– ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த ஹாலுக்கு தெற்கே அமைந்துள்ள முன்வரண்டா சோதனை செய்யப்பட்டது. வரண்டாவில் இருந்த திரு.கண்ணன், த/பெ பழனியப்பன், 3/3பி, பெருமாள்கோவில் தெரு, குளத்தூர் என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடமிருந்த ரூ.60/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவர் எனது அண்ணன் மனைவி திருமதி.அனுதிலகா என்பவருக்கு சொந்தமான நத்தம் வீட்டு மனைக்கு உண்மை தன்மை சான்று பெற, தான் வந்ததாகவும், தனது செலவுக்கு கொண்டு வந்த பணம் என்று கூறினார். விசாரணைக்குப்பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.60/– ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு அருகில் இருந்த திரு.பாரதி, த/பெ ராசு, எண்.17, இந்திரா நகர், இச்சிகாமலைப்பட்டி, குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடம் பணம் ஏதுமில்லை என்று கூறினார். மேலும் தனது அத்தை திருமதி.பானுமதி என்பவர் வீட்டு மனை வாங்கியிருப்பதாகவும், அதை பதிவு செய்ய அவருக்கு துணையாக வந்ததாக கூறினார்.

அவருக்கு அருகில் இருந்த திரு.அர்ஜீன், த/பெ கோவிந்தராசு, எண்.392, சோண்டாம்பட்டி, கிள்ளனூர் அஞ்சல், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடம் பணம் ஏதுமில்லை என்று கூறினார். மேலும் தனது அத்தை திருமதி.பானுமதி என்பவர் வீட்டு மனை வாங்கியிருப்பதாகவும், அதை பதிவு செய்ய சாட்சியாக வந்ததாகவும் கூறினார். மேலும் அவருக்கு அருகில் இருந்த திரு.சுரேஷ், த/பெ கணேசன், 1எ, கே.கே.நகர், திருச்சி என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடமிருந்த ரூ.4,680/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவரது பக்கத்து வீட்டுகாரரான திருமதி.பானுமதி என்பவர் வீட்டு மனை வாங்கியிருப்பதாகவும், அதை பதிவு செய்ய சாட்சியாக வந்ததாகவும் கூறினார். விசாரணைக்குப்பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.4,680/- ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அவரக்கு அருகில் இருந்த திரு.மதியழகன், த/பெ கருப்பையா, எண்.8, பாரதி நகர், கே.சாத்தனூர், திருச்சி என்பவரையும், அவரது மனைவி திருமதி.தேனேஸ்வரி என்பவரையும் விசாரித்த போது, அவர்கள் தங்களிடம் பணம் ஏதுமில்லை என்றும், தேனேஸ்வரியின் பெயரில் வீட்டு மனை வாங்கியிருப்பதாகவும், அதற்கு இன்று பத்திரப்பதிவு செய்ய வந்ததாகவும் தெரிவித்தார்கள். மேலும் அவருக்கு அருகில் இருந்த திரு.செல்வம், த/பெ பாஸ்கர், எண்.169/1A, மேலத்தெரு, குளத்தூர், புதுக்கோட்டை மாவட்டம் என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடமிருந்த ரூ.25/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவர் தனது அம்மாச்சி திருமதி.ராஜலெட்சுமி பெயரில் வீட்டு மனை வாங்கியதற்காக பத்திரம் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்கான ஆவணத்தை பெற வந்ததாகவும் தெரிவித்தார். விசாரணைக்குப்பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.25/- ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அந்த அலுவலகத்தின் ஹாலுக்கு கிழக்கே இருந்த கணினி அறையை சோதனை செய்யப்பட்டது. அங்கு பணமோ, விலைமதிப்புள்ள பொருட்களோ இல்லை. மேலும் அங்கிருந்த டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் திருமதி.சங்கீதா என்பவரை விசாரித்த போது அவர், தனது கருப்பு கலர் ஹேண்ட்பேக்கிலிருந்து ரூ.675/- எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரித்த போது, இன்று காலையில் அலுவலகத்திற்கு வரும் போது ரூ.820/- கொண்டு வந்ததாகவும், சென்ட் பாட்டில் வாங்கிய செலவு போக மீதத்தொகை என்று தெரிவித்தார். மேலும் தனிநபர் பண இருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் இன்று 27.08.2026-ஆம் தேதி ரூ.820/- கொண்டு வந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.675/- ஆய்வுக்குழுவினர் முன்னிலையில் திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு அருகிலிருந்த கேமரா ஆப்ரேட்டர் திரு.மதன்குமார் என்பவரை விசாரித்த போது அவர், தனது சட்டையின்

மேல்பாக்கெட்டிலிருந்து ரூ.56/– எடுத்து ஆஜர் செய்தார். இது குறித்து விசாரித்த போது, இன்று காலையில் அலுவலகத்திற்கு வரும் போது ரூ.340/– கொண்டு வந்ததாகவும், தான் மதிய சாப்பாட்டு செலவு மற்றும் சென்ட் பாட்டில் வாங்கிய செலவு ஆகியவை போக மீதத்தொகை என்று தெரிவித்தார். மேலும் தனிநபர் பண இருப்பு பதிவேட்டை பார்வையிட்டதில் இன்று 27.08.2026–ஆம் தேதி ரூ.340/– கொண்டு வந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.56/– ஆய்வுக்குழுவினர் முன்னிலையில் திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்த அலுவலகத்தில் சார்பதிவாளர் அமர்ந்திருந்த ஹாலுக்கு மேற்கே இருந்த ஆவணப்பதிவுக்கு வரும் பொதுமக்கள் அமரும் அறையை சோதனை செய்த போது அந்த அறையில் பணம் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. மேலும் அந்த அறையில் அமர்ந்திருந்த திரு.சுரேஷ்குமார், த/பெ ராஜூ, எண்.185, கவிபாரதி நகர், உடையான்பட்டி, கே.கே.நகர், திருச்சி–2 என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடமிருந்த ரூ.4,510/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவர், தனக்கு தெரிந்த திரு.அப்துல் அஜிஸ் என்பவரது இடத்தை திருமதி.பானுமதி என்பவருக்கு விற்பனை செய்திருப்பதாகவும், அதற்கான பத்திரபதிவிற்கு அப்துல் அஜிஸ் என்பவருக்கு துணையாக வந்ததாகவும் தெரிவித்தார். மேற்கண்ட பணம் தனது சொந்த செலவிற்கு கொண்டு வந்தது என்று தெரிவித்தார். விசாரணைக்குப்பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.4,510/– ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அவருக்கு அருகில் இருந்த திரு.அப்துல் அஜிஸ், த/பெ சையது இப்ராகீம், எண்.25/12, கபூர் சாகிப்தெரு, ராயப்பேட்டை, சென்னை–14 என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடமிருந்த ரூ.7,530/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவர், தனக்கு சொந்தமான இடத்தை திருமதி.பானுமதி என்பவருக்கு விற்பனை செய்திருப்பதாகவும், அதற்கான பத்திரபதிவிற்கு வந்ததாகவும் தெரிவித்தார். மேற்கண்ட பணம் தனது சொந்த செலவிற்கு கொண்டு வந்தது என்று தெரிவித்தார். விசாரணைக்குப்பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.7,530/– ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு அருகில் இருந்த திருமதி.பானுமதி, க/பெ சத்தியமூர்த்தி, எண்.4, எல்.ஐ.சி காலணி, லெட்சுமி தெரு, கே.சாத்தனூர், திருச்சிராப்பள்ளி என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். மேலும் அவர், திரு.அப்துல் அஜிஸ் என்பவருக்கு சொந்தமான இடத்தை தான் வாங்கியிருப்பதாகவும், அதற்கான பத்திரபதிவிற்கு வந்ததாகவும் தெரிவித்தார். அவருக்கு அருகில் இருந்த திரு.பூபதி, த/பெ பூமையா, எண்.362, உடையாளிப்பட்டி, புதுக்கோட்டை என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடமிருந்த ரூ.9,160/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவர், தனக்கு தெரிந்த திருமதி.சுதா என்பவர் வீட்டு மனையிடம் வாங்கியதாகவும், அதற்கான பத்திரபதிவில் சாட்சி

கையெழுத்து போட வந்ததாகவும் தெரிவித்தார். மேற்கண்ட பணம் தனது வீட்டிற்கு அரிசி வாங்க கொண்டு வந்தது என்று தெரிவித்தார். விசாரணைக்குப்பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த பணம் ரூ.9,160/– ஆய்வுக்குழு அலுவலர்கள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அவருக்கு அருகில் இருந்த திருமதி.அமிர்தம், க/பெ நாடிமுத்து, அன்பநகர், நாஞ்சூர், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடமிருந்த ரூ.5,320/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவர், தனது குடும்பத்துடன் இன்று காலை கொல்லங்குடியில் உள்ள வெட்டுடையார்காளியம்மன் கோவிலுக்கு வாடகை காரில் சென்றுவிட்டு, இங்கு வந்ததாகவும், அந்த வாடகை காருக்கு வாடகை கொடுப்பதற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். விசாரணைக்கு பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் அவரது பணம் ரூ.5,320/– திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு அருகில் இருந்த திருமதி.சுதா, க/பெ சேகர், தெற்குதெரு, உடையாளிப்பட்டி, குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். மேலும் அவர், திருமதி.அமிர்தம் என்பவரிடம் இருந்து ஒரு வீட்டு மனை வாங்கியதாகவும், அதற்கான பத்திரப்பதிவிற்கு வந்ததாகவும் தெரிவித்தார். அவருக்கி அருகிலிருந்த திரு.சேகர், த/பெ தங்கவேல், தெற்குதெரு, உடையாளிப்பட்டி, குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடமிருந்த ரூ.30,300/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவர் பத்திரப்பதிவு செலவுக்கு கொண்டு வந்தது என்றும், ஏற்கனவே ஆவண எழுத்தர் திரு.கருப்பையா என்பவருக்கு ரூ.15,000/– கொடுத்ததாகவும், மீதத்தொகை ரூ.3,000/– கொடுப்பதற்காகவும், இதரச்செலவுக்காகவும் கொண்டு வந்ததாக தெரிவித்தார். விசாரணைக்கு பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் அவரது பணம் ரூ.30,300/– திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அவருக்கு அருகில் இருந்த திரு.சக்திவேல், த/பெ சின்னையா, தெற்குதெரு, உடையாளிப்பட்டி, குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவரை விசாரித்த போது அவர் தன்னிடமிருந்த ரூ.10,050/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவர், தனது ஊரைச் சேர்ந்த சேகர் என்பவர் தனது மனைவியின் பெயரில் வீட்டுமனை ஒன்று வாங்கியிருப்பதாகவும், அதை பதிவு செய்ய அவர்கள் இங்கு வந்ததாகவும், தான் ஒரு வேளையாக கீரனூர் வந்ததாகவும், அப்போது சேகர் வேலை முடிந்துவிட்டதாக என பார்க்க வந்ததாகவும், அந்த சமயத்தில் ஆய்வுக்குழுவினர் வந்து ஆய்வு செய்ததாகவும் கூறினார். மேலும் அவர் வைத்திருந்த மேற்படி பணம் தனது சொந்த செலவுக்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். விசாரணைக்கு பின் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வுக்குழு அலுவலர் முன்னிலையில் அவரது பணம் ரூ.10,050/–

திருப்பி அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது. அலுவலருக்கு அருகில் இருந்த திருகதேசி, தரிபெ செல்லையா, கிருஷ்ணமாபாய்பட்டி, கீழத்தெரு அதிகாரி, முனைதுறை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்பவரை விசாரித்த போது அவரிடம் பணம் ஏதுமில்லை. மேலும் அவர், தான் ஆவணை எழுத்தர் திரு.கருப்பையா B.L., என்பவரிடம் உதவியாளராக வேலை செய்வதாகவும், இன்று திருமதி.கதா என்பவர் வீட்டு மனை வாங்குவதற்கு ஆவணம் தயார் செய்து கொடுத்ததாகவும், அந்த பத்திரப்பதிவு இன்று நடைபெற இருந்ததால், தான் அது சம்பந்தமாக இந்த அலுவலகத்திற்கு வந்திருந்ததாகவும் தெரிவித்தார். அதன்பிறகு ஆய்வுக்குழுவினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் 2020ஆம் ஆண்டிற்கான 1) நிரந்தர பணியாளர்கள் வருகைப்பதிவேடு, 2) ஒப்பந்தப்பணியாளர்கள் வருகை பதிவேடு, 3) தனிநபர் பண கையிருப்பு பதிவேடு, 4) A கணக்கு, 5) IP Camera / CD Account, 6) H கணக்கு ஆகியவை கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட பிரதிகள் ஆகியவற்றை சார்பதிவாளர் ஆஜர் செய்தார். அதன்பிறகு, இந்த தினம் ஆய்வில் மேற்கண்ட 1 முதல் 6 வரையிலான ஆவணங்களும், மேற்படி பணம் ரூ.1,10,700/-க்கு உரிய முகாந்திரம் கூறப்படாததால் பத்திரம் பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் கையூட்டாக பெற்ற பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அந்தப்பணம் ரூ.1,10,700/- மற்றும் அதில் சுற்றப்பட்டிருந்த ஆகஸ்ட்-17ஆம் தேதியிட்ட நாளிதழ் ஆகியவை ஆய்வுக்குழுவினரால் கைப்பற்றப்பட்டது.

மேற்படி தினம் ஆய்வில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,10,700/-ஐ பற்றி தகுந்த விளக்கம் கூறாததால் மேற்கண்ட தொகை உள்நோக்கத்தோடு, தனது பதவி பயன்படுத்தி திரு.க.சேதுராமலிங்கனார், உதவியாளர் / பொறுப்பு சார்பதிவாளர் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் லஞ்சமாக பெற்று அவருடைய சட்டுப்பாட்டில் உள்ள பதிவு கையிருப்பறையில் உள்ள மேற்படி அட்டை பெட்டிக்குள் வைத்திருக்கலாம் என சந்தேகித்து மேற்கண்ட தொகை ரூ.1,10,700/- கைப்பற்றப்பட்டது. எனவே கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,10,700/- உட்பட மேற்படி உதவியாளர் / பொறுப்பு சார்பதிவாளர் திரு.சேதுராமலிங்கனார் என்பவர் மீது மேல் நடவடிக்கை எடுக்க கோரி இந்த புகார்

மனுவை அளிக்கிறேன். ஒப்பம் (திரு.மு.பாலகிருஷ்ணன், வயது 44/2026, த/பெ முத்து, தனி வட்டாட்சியர் (ச.பா.தி), வட்டாட்சியர் அலுவலகம், கறம்பக்குடி, புதுக்கோட்டை).

Sir, Received a complaint at 18.30 hrs on 28.08.2026 and registered a case in Pudukkottai V&AC Cr.No.04/2026 u/s 106 BNSS and 7 of Prevention of Corruption Act-1988 as Amended in 2018 against Tr.S.Sethuramakrishnan, Assistant/(I/c) Sub-Registrar, Kulathur Sub Registrar Office, Keeranur, Pudukkottai District, (S/d. A.பீட்டர், Inspr, V&AC, PDK Dt.28.08.2026)

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார் மனு மற்றும் திடீர் ஆய்வு அறிக்கையின் அசல்களை புதுக்கோட்டை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கும், நகல்களை சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பிற்கும் வைக்கப்பட்டது.

(அ.பீட்டர்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
புதுக்கோட்டை.